# யாழ். கோட்டைக்குள் கட்டடங்கள் யாவும் சேதம்!

விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 புரட்டாதி: 29 ஐ அவ்வல் பிறை: 25 இதழ்: 173
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-10-1990

## பத்திரிகையாளர்கள் பார்வையிட்டனர்

(என். கே. துரைசிங்கம்)

(யாழ்ப்பாணம்)
யாழ்.கோட்டை மீதுவிடுதலைப் புலிகள் கடந்த நான்கு மாத காலமாக நடத்திய தாக்குதலில் அங்குள்ள கட்டடங்கள் யாவும் பாவிக்க முடியாத அளவிற்கு முற்ருக சேதமடைந்துள்ளது. நூற்றுக்குமேற்பட்ட வாகனங்களும் எரிந்த நிலையில் காணப்பட்டன.

(3-ம் பக்கம் பார்க்க)

## ஹெலிகொப்டரிலிருந்து கிரனேட் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ் கோட்டைச் சுற்ருடலில் நேற்றுக்காலை ஹெலிகொப்டரிலிருந்து கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

பல தடவைகள் தாழப் பதிந்து சுற்றி வட்டமிட்ட ஹெலிகொப்டரிலிருந்து ஐந்து தடவை கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை யாழ். நகர்ப்புறத்தில் நேற்று நண்பகலளவில் ஹெலிகொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

உடுப்பிட்டியில் பொம்மர் தாக்குதல்:

# தேவாலயத்தில் அகதிகளாக தங்கியிருந்த மூன்று சிறுவர் பலி

## ஆறு பேர் படுகாயம்; வர்த்தகநிலையங்கள் சேதம்

[வடமராட்சி]

**உடுப்பிட்டியில் அகதிகள் தங்கியிருந்த தேவாலயம் மீது, நேற்று நடந்த தாக்குதலில் மூன்று சிறுவர் ஸ்தலத்திலேயே மரணமானுர்கள். ஆறு பேர் படுகாயம் அடைந்தனர்.**

நேற்று நண்பகல் 11-45 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

இரண்டு பொம்மர்கள் வட்டமிட்டு, உடுப்பிட்டிச் சந்தியிலும், சந்திக்கு அண்மையிலும் உள்ள உலக இரட்சகர் தேவாலயத்திலுமே இத்தாக்குதல் நடந்தது.

தேவாலயத்தில், அதே நேரம் பெருந்திரளான அகதிகள் தங்கியிருந்தனர். மேற்படி தாக்குதலில் தனபாலசிங்கம் தனராஜ் (வயது 8), ஊர்காவற்றுறை. விநாயகமூர்த்தி மோகன் (வயது 14), உடுப்பிட்டி. ஐயாத்துரை குமாரதாஸ் (வயது 13), ஆதியாமலை, உடுப்பிட்டி ஆகிய மூன்று சிறுவர்களுமே ஸ்தலத்தில் பலியானுர்கள்.

சோ. சிவனேசசுந்தரம் (வயது 39), வல்வெட்டித்துறை. கே.ஞானப்பிரகாசம்

[4-ம் பக்கம் பார்க்க]

## சோழர்கால கல்வெட்டு விடுதலைப்புலிகளால் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். கோட்டையிலிருந்த சோழர்கால கல்வெட்டுகள் பல விடுதலைப்புலிகளினுல் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

1780ம் ஆண்டு இக்கோட்டை கட்டப்பட்டபோது சோழர்கால கல்வெட்டுக்கள் வைத்துக் கட்டப்பட்டது.

அக்கல்வெட்டுகள் யாவும் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளது.

## யாழ். நகரிலும் தாக்குதல் ஒரு பெண்மணி பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்.நகரின் சில பகுதிகளில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இரு பொம்மர் விமானங்கள் குண்டுகளை வீசியதில் ஒரு பெண் கொல்லப்பட்டார்.

மேற்படி இரு விமானங்களும் அரியாலை நெடுங்குளம் பகுதியிலும், திருநெல்வேலி பகுதிகளிலும் குண்டுகளை வீசியது.

நெடுங்குளம் பகுதியில் வீசிய குண்டுகள் ஒரு பாடசாலை வளவிலும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள வீடுகளிலும் விழுந்து சேதத்தை ஏற்படுத்தியது.

திருநெல்வேலிப் பகுதியில் வீசிய குண்டொன்று அப்பகுதியிலுள்ள ஆடியபாதம் வீதி

[4-ம் பக்கம் பார்க்க]

மட்டுநகரில்

## புலிகள் ஊர்காவல்படை மோதல்

(மட்டுநகர்)
மட்டுநகர் மீராவோடைப் பகுதியில் ஊர்காவற்படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் கடும் மோதல் ஏற்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறையில்

## விற்பனை நிலையமும் வீடுகளும் சேதம்

(வடமராட்சி)
பருத்தித்துறையில் நேற்று நண்பகலில் பொம்பர் தாக்குதல் நடத்தியபோது வீடுகள் சேதமடைந்தன. மக்கள் பதுங்குகுழியில் தஞ்சமடைந்ததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

நேற்று நண்பகல் 11-50 மணியளவில் ஓராம்கட்டை சந்தியிலும் பருத்தித்துறையிலும் பொம்பர்கள் தாக்குதல் நடத்தின.

வி. எஸ். அழகேசன், திருமதி இ. கந்தசாமி. திருமதி எஸ். இராசம் ஆகியோர்களது வீடுகளும், பருத்தித்

(4ம் பக்கம் பார்க்க)

மணல்ஆறு பகுதியில்

## புலிகளின் தாக்குதலில் 4 சிங்கள ராணுவத்தினர் பலி!

(முல்லைத்தீவு)
மணல்ஆறு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்குமிடையில் நேற்று நடைபெற்ற கடும் மோதலில் 4 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

கொக்கிளாய் முகத்துவார இராணுவ முகாமிலிருந்து ஒரு மைல் தாண்டி தண்ணீர்எடுப்பதற்காக வந்த இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் இடைமறித்து தாக்கியதிலேயே நாலு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

மேற்படி மோதலை கேள்விப்பட்டு கவச வாகனங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

அத்தியாவசிய சேவைகளை

## சீராக்க அரச அதிபர் இன்று அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்திலுள்ள அத்தியாவசிய சேவைகளுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளின் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. அனரன் அல்பிறட் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி கூட்டத்தில் வங்கிகள் வழமைபோல் இயல்பாக இயங்க முடியாத சூழ்நிலையால் பொதுமக்கள் எதிர்நோக்கும் எண்ணிறந்த பண

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ் கோட்டை தகர்க்கப்படுகிறது

[யாழ்ப்பாணம்]
யாழ். கோட்டையை கடற்கரை பக்கமாக தகர்க்கும் பணியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மேற்பார்வையில் கோட்டை தகர்க்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சர்வதேச அரங்கில்

## அரச இனப்படுகொலை அம்பலமாகிவிட்டது

(ஜெனிவா)
இலங்கை அரசாங்கம் நேரடியாகவும், மறைமுகமாகவும் இனப் படுகொலை புரிவதும், அரச விரோத சக்திகளைப் பூண்டோடு அழிப்பதும் சர்வதேச அரங்கில் ஆதாரபூர்வமாக அம்பலமாகிவிட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செப்டம்பர் மாதத்தின் முழு அளவிலான அறிக்கையில் 1987-90ஆண்டுவரை நிகழ்ந்த மனிதஉரிமை மீறல்கள் குறித்துவிரிவான தகவல்களை வெளியிடப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மொழிக்கு உரிய இடமளிக்க

# தமிழர்கள் தயங்கலாமா?

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் பெயர் பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமையளிக்குமாறு 6 மாதத்திற்கு முன்னர் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. 1956 ல் தனிச்சிங்களசட்டம் கொண்டு வந்திருந்தபோதே இதனை செய்திருக்கவேண்டும் ஆனால் அது நடக்கவில்லை, 34 வருடத்தின்பின் விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளுக்கு எத்தனை வர்த்தகர்கள்செவிசாய்த்தார்கள்? ஒரு சில வர்த்தகர்களைத் தவிர மற்றவர்கள் அதனை நிறைவேற்றவில்லை. ஒருமாதமல்ல பல மாதங்களாகியும் அதனை நிறைவேற்றவில்லை, கடந்த ஜூன் மாதம் 25ம் திகதிக்குப் பின்னர் யாழ் நகரில் விமானத்தாக்குதல்கள் நடந்தபின்னர் சேதங்களை பார்வையிட அண்மையில் நகருக்கு சென்றிருந்தேன். பல கடைகள் சேதமடைந்திருந்தன. சில கடைகள் தரை மட்டமாகியிருந்தன. கடைகளில் பெயர்ப்பலகைகளையே காணவில்லை. சில பெயர்ப் பலகைகளில் குண்டுபட்டு சேதமடைந்திருந்து சுருண்டு விழுந்திருந்தது. அப்போது எனக்கு 'தமிழுக்கு முன்னுரிமை கொடுங்கள்' என்ற வேண்டுகோள் நினைவுக்கு வந்தது.

தமிழன் தமிழுக்குரிய அந்தஸ்தை கொடுக்க முன்வராவிட்டால் உலகில் வேறுயார்தான் கொடுக்கப்போகிறார்கள். நூற்றுக்குநூறு வீதம் தமிழ்பேசும் யாழ்நகரிலே, தமிழ் மொழி புறக்கணிக்கப்படலாமா?

## ஆங்கிலத்தில் மட்டும்

யாழ் நகரில் ஒரு முக்கிய ஸ்தாபனம். அதன் தலைமைப் பீடம் கொழும்பில். அந்த ஸ்தாபனத்தின் வெளிவாசலில் ஒரு பெயர்பலகை' அதில் அந்த இடம் ஸ்தாபனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தனி ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டிருந்தது. தமிழ் மொழிக்கு இடமில்லை. அந்த ஸ்தாபனத்திற்கு தினமும் வருபவர்கள் தமிழர்கள். அநேகர் கிராமங்களிலிருந்து வாகனங்களில் வரும் மக்கள். அவர்களில் அநேகர் விவசாயிகள். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. அவர்கள் புரியும் மொழியில் தமிழிலும் அந்த பெயர்ப்பலகை இருக்கக் கூடாதா? இந்தக்கேள்வி அந்தப்பெயர் பலகையை பார்க்கும் எவருக்கும் எழக்கூடிய தொன்று.

## வாகனத்தில் தனிச்சிங்களம்

யாழ் நகரில் மற்றொரு காரியாலயம், இந்தக் காரியாலயத்திற்கு புதிதாக மூன்று நான்கு வாகனங்கள் வந்திருந்

**கா. யோகநாதன்**

தது. அந்த வாகனத்தின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் தனிச்சிங்களம் ஆட்சி புரிந்தது. இரு பக்கங்களில் மட்டும் மிகச் சிறிதாக தமிழிலும் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அந்த வாகனம் எதிரே வரும்போதோ அல்லது எம்மைக் கடந்து செல்லும் போதோ அந்த சிங்கள எழுத்துக்கள் தமிழ் மக்களின் கண்ணைக் குத்தும். இதுபற்றி பத்திரிகையிலும் ஒருசெய்தி வந்திருந்தது. அதன் பின்னரும் கூட தமிழுக்கு இடமளிக்கப்படவில்லை.

அந்த வாகனங்களை இங்கு அனுப்பிவைக்கும் போது மேலிடம் தமிழுக்கு உரிய இடத்தை அளித்திருக்கவேண்டும். தற்போது தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. சட்ட மூலம் தமிழும் உத்தியோக மொழியாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது ஆனால் நடைமுறையில் எதுவுமே நடக்கவில்லை. எல்லாம் பழைய கதைதான் தமிழுக்கு உரிமை வழங்குவதாக கூட்டங்கள் நிறைவேற்றப்படும் ஆனால் அச்சட்டம் அமுல் செய்யப்படுவதில்லை.

## தமிழ் மொழிக்கு இடமில்லை

யாழ். நகரில் ஆஸ்பத்திரி இயங்கியபோது யாழ். ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுப்பதற்குமுன், நோயாளர்பெறும் 'துண்டு' முழுக்க முழுக்க தனிச்சிங்களம்தான் மருந்துக்குக்கூட ஒரு தமிழ் வார்த்தை கிடையாது. சம அந்தஸ்து வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டபின்னரும் இந்த நிலைமைதான் அதுமட்டுமல்ல வாட்டில் அனுமதிக்கும் நோயாளரை பதிவு செய்யும் இடாப்பு மற்றும் சில பத்திரங்களிலும் தமிழ் மொழிக்கு இடமில்லை.

## கடித உறைகளில்

வடக்கு கிழக்கிற்கு அனுப்பபடும் கடித உறைகளில் 'அரச பணி' என்று வரும் எழுத்துக்களும் தனிச்சிங்களத்தில் தான் இருக்கிறது. அதனை அனுப்புகிறவர்களும் தமிழர்களாகவே இருக்கிறார்கள், அதுமட்டுமல்ல விலாசம் எழுதும் போது தமிழ் மொழியை புறக்கணித்து விட்டு ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். அதுவும் உள்ளூர் கடிதங்களுக்கு கூட உறவினர்களுக்கு எழுதும் கடிதங்களுக்கு கூட ஆங்கிலத்தில் விலாசம் எழுதுகின்றார்கள். இந்த நிலை இனியாவது மாறவேண்டாமா?

## பத்திரங்களில் தமிழுக்கு இடமில்லை

யாழ். ஆஸ்பத்திரியில் சில மாதங்களுக்கு முன்னர் என் நண்பர் ஒருவரை சந்தித்தேன் அவர் புதிதாக ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். கையில் சில பத்திரங்களை வைத்திருந்தார். அவற்றில் தமிழ் மொழியே கிடையாது. ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தான் எழுதப்பட்டிருந்தது. அவருக்கு ஆங்கிலம் நன்றாக தெரியாது. அந்தப் பத்திரம் கல்விப்பகுதியினரால் வழங்கப்பட்டதாகும். நியமனத்திற்கு முன் அதனை நிரப்பி சமர்ப்பிக்கவேண்டும். அப்பத்திரத்திலுள்ள கேள்விகளுக்கு தமிழில் பதில் எழுதலாமா என்று என்னிடம் கேட்டார். ஆங்கிலத்தில் உள்ள கேள்விகள் ஒவ்வொன்றையும் அவருக்கு மொழி பெயர்த்து கூறினேன். அதன் பின் அவர் சென்று விட்டார். இப்படியான நிலைமை தமிழுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக இந்த அரசு, உலகிற்கு பறைசாற்றிய பின்னரும் நீடித்து வருகிறது'

தமிழர் பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைக்கும் போதுதான் அவர்களின் லட்சியம் நிறைவெறும் போது தான் இவற்றிற்கெல்லாம் தானாகவே தீர்வு கிடைத்து விடும்.

---

### மக்களை போருக்கு தயாராக்கும் பணியில்

# கலை இலக்கியகர்த்தாக்களின் பங்கு மிக முக்கியமானதாகும்

மக்களை போருக்கும்புரட்சிக்கும் தயாராக்கும் மகத்தான பணியில் கலை, இலக்கிய கர்த்தாக்களின் பங்கு மிக முக்கியமான தொன்றாகும் என்று 'நிதர்சனம்' தேசிய கலைஞர்களுக்கு அமைப்பு விடுத்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இன்றுநாம் நமது மண்ணில் நமது உரிமையையும். இறைமையையும் வென்றெடுத்து தமிழீழத் தாயகத்தை மீட்கும் இறுதிப்போரொன்றில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றோம். எதிரியின் திட்டமிட்ட எம்மின அழிப்பு வேலைகள், பன்முகப்பட்ட முறையில் ஒரே இலட்சியத்துடன் எம்மண்ணையும் மக்களையும் நிர்மூலமாக்கும் பணியினை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்த நிலையில் எமது மக்களின் தாயகப்பற்றுடன் கூடிய போராட்ட உணர்வு ஒருமுகப்படுத்தப்பட்டு கூர்மைப் படுத்தப்பட்டாலன்றி நமது மண்ணின் விடுதலையானது துரிதமாக ஏற்படுதல்இயலாததாகும். அதாவது திலீபன் கூறியது போன்று ''மக்கள் புரட்சி'' வெடித்தால் மட்டுமே சுதந்திரத் தமிழீழம் மலரும் காலத்தை வெகு விரைவில் உருவாக்க முடியும்.

மக்களைப் போருக்கும் புரட்சிக்கும் தயாராக்கும் மகத்தான பணியில் கலை இலக்கிய கர்த்தாக்களின் பங்கு மிக முக்கியமானதொன்றாகும். கலை இலக்கிய ஊடகங்கள் மக்களை அணுகுவதற்கு இலகுவானதும் உணர்வு ரீதியாகச் சிந்திக்க வைத்து செயற்படவைக்கும் ஆற்றல் கொண்டுள்ளதென்பதை உலகின் பல்வேறு நாடுகளிலும் நடந்த நடக்கின்ற விடுதலைப் போராட்ட நிகழ்விலிருந்து நாம் அறிந்து கொண்டுள்ளோம்.

## கலைஞர்களின் பங்கு

சீனப்புரட்சியின் தலைவர் மாவோ.வியட்நாமியத்தந்தை ஹோசிமின் ரஷ்ய புரட்சிக் கலைஞன் மாக்ஸிம் கோர்கி இருண்டகண்டத்தின் விடுதலை விடியலுக்காக இலக்கியம் படைத்த கறுப்புக் கலைஞர்கள், பாரத நாட்டின் விடுதலைக்காக கவிதை மூலம் அறைகூவல் விடுத்து மக்கள் எழுச்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதி, தாகூர், மற்றும் வங்க கேரள - மாநிலக்கலைஞர்கள் இப்படி ஏராளமானோர் தத்தம் தாயகத்து விடுதலைக்காக கலை இலக்கியப் படைப்புகள் மூலம் மக்களின் உணர்வலையைத் தட்டி எழுப்பி போராட்டத்தில் பங்கேற்கச் செய்ததன் மூலம் போராட்டத்துக்கு தம்பங்கினை செவ்வனே செய்துள்ளதை வரலாறுகள் உறுதிபடுத்துகின்றன.

இத்தகைய பங்களிப்பை அவர்களைக் காலத்தைவென்ற கலைஞர்களாக்கி தத்தம் நாட்டின் தேசியக்கலைஞர்களாகும் உயர் கௌரவத்தையும்பெற்றுக்கொடுத்துள்ளது.

இதந்தரு மனையினீங்கி<br>
இடர்மிகுசிறைப்பட்டாலும்<br>
பதந்திரு இரண்டும்மாறி<br>
பழிமிகுந் திழிவுற்றாலும்<br>
விதந்தரு கோடியின்னல்<br>
விளைந்தெனை அழித்திட்டாலும்<br>
சுதந்திர தேவிநின்னை<br>
தொழுதிடல் மறக்கிலேனே

என்று புரட்சிக்கவி பாரதி தேசப்பற்றுந்த சுதந்திரத்தின் அருமையினை உணர்வு பூர்வமாக எழுதி எழுச்சியூட்டினார். இது ஒரு உதாரணம் மட்டுமே.

தமிழீழவிடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை பலகலைவடிவங்கள் விடுதலைப் போருக்கு ஆதரவாக வெளிவந்துள்ளன. பலகலைஞர்கள் இல்வாறான படைப்புக்களை உருவாக்கப் பெரிதும் உதவி புரிந்துள்ளனர்.

## ஆதரவு போதாது

எனினும், இவை போதாது தமிழீழத்தின் அனைத்துக் கலைஞர்களும் எம்முடன் இணைய வேண்டும். அவர்கள் தமது முழுமையான திறமைகளை விடுதலைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

தமிழீழக் கலைஞர்களே! படைப்பாளிகளே!!

உங்களை இத் தேசத்தின், நம் தமிழீழத் தாயகத்தின் எதிர்காலம் தேசியக் கலைஞர்களாக, படைப்பாளிகளாகக் கௌரவிக்கும் உயர்ந்த வாய்ப்பினைப் பெறுவதற்காக இறுதிக் கட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்போகிறீர்கள்?

குழந்தைகளிலிருந்து முதியோர்கள் வரை, வயது, பால்வேறுபாடின்றித் தம் பங்களிப்பினைப் போட்டிபோட்டு நல்கிவரும் இந்தக் காலகட்டத்தில் நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?

இந்தத் தேசத்தின் எங்கள் தாயகமாம் தமிழீழத்தின் விடுதலைப் போரில் உங்களின் பங்களிப்பினை உணர்வுரீதியாகப் புரிந்துகொண்டு எம்மோடு இணைந்து செயற்பட்டு ஒரு மக்கள் புரட்சிக்கான அணிதிரளலில் பிணைத்துக் கொள்ள உடனே புறப்படுங்கள்!

உங்கள் துறைகளில் உங்களோடு நாமும் எம்மோடு நீங்களுமாய் ஒன்றிணைந்து செயல்படுவதற்காக உங்களின் ஆக்கபூர்வமான குரலை நாம் எதிர்பார்க்கின்றோம்.

உலகில் விடுதலைக்காகப் போரிடும் மக்களது வரலாறுகள் நிச்சயம் உங்களைச் சிந்திக்கவும், செயற்படவும்வைக்கும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு நாம் புதிதாக எதனையும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

விடியலை அண்மிக்கும் இவ்வேளையில் அதனைத் துரிதப்படுத்தும் பணியில் உங்களின் பங்கு கணிசமானது. என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த விரும்பும் கலைஞர்கள், படைப்பாளிகள் அனைவரும் ''நிதர்சனம்'' 234, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தின்தொடர்பு கொள்ளவும்.

---

### மின்மாற்றி

# ஒயில் திருட்டினால் மின் விநியோகம் இல்லை

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மின்மாற்றியிலுள்ள ஒயில் திருடப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இத்திருட்டினால் ஆனைக்கோட்டை, நவாலிப்பகுதி மக்களுக்கு மின் விநியோகம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

# தனியார் பென்ஷன் திட்டம் சட்ட வரைவு தயாரிப்பு

(கொழும்பு)

தனியார் துறைக்கும் பென்ஷன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சமூக நலன்துறை அமைச்சு சட்ட வரைவுகளைத் தயாரித்திருப்பதாக சமூகநலன் துறை அமைச்சின் செயலாளர் காப்டன் டயஸ் தெரிவித்துள்ளார்.

இச்சட்ட வரைவு விரைவில் மந்திரி சபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

---

### பேக்கரிகள் மீது

# திடீர் சோதனை நடத்த முடிவு

(காங்கேசன்துறை)

சுகாதர விதிமுறைகளை அனுசரிக்காது செயல்படும் பேக்கரிகள்மீது திடீர் சோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சில மாதங்களாக தடைப்பட்டிருந்த பாண் பேக்கரிகள் தற்போது மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளபோதிலும் பல பேக்கரிகளில் சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாமல் பாண் தயாரிக்கப்படுவதாக யாழ். மாவட்ட உணவு மருந்து கலப்பட மோசடி கண்காணிப்பு அதிகாரி திரு. த. மகாதேவனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதையடுத்து பேக்கரிகள் மீது திடீர் சோதனை மேற்கொண்டு கடும் நடவடிக்கை எடுப்பதில் அவர் ஈடுபட்டுள்ளார். (86)

---

## முத்திரைக்கு தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திலும். சில்லாலை, மாதகல், இளவாலை. பெரியவிளான் ஆகிய இடங்களில் உள்ள உப தபால் நிலையங்களிலும் முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. (72)

## புங்குடுதீவு வைத்தியசாலையில்
# நோயாளர் அதிகரிப்பினால் ஏற்பட்டுவரும் கஷ்டங்கள்

(புங்குடுதீவு)
புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் தங்கிருந்து சிகிச்சை பெற்றுவரும் பெருந்தொகையான நோயாளரும், அங்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்லும் வெளிநோயாளர்களின் தொகையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இதனால் நோயாளர்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் துயரங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

மேலும் நாட்டில் ஏற்பட்டு வந்துள்ள நெருக்கடி நிலை காரணமாக கடந்த பல மாதங்களுக்கு மேலாக அவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ள பெருந்தொகையான நோயாளர்களுக்கு நல்ல முறையில் வைத்திய சேவைகளை செய்வதற்கு மருந்துகள் பற்றாக்குறையாக வுள்ளது.

இந்நிலையினால் நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும், மருந்துக்கடைகளிலும் தங்கள் மருந்துகளை பெறுகிறார்கள்.

கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக அங்கு சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் குடிநீர் வசதியின்றி கிணற்றிலுள்ள உப்பு நீரையே பருகி வருகின்றார்கள்

உணவு வசதிகளும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. (101)

## சட்டவிரோத
# மின்பாவனையை நிறுத்த புதிய சட்டமூலம்

(கொழும்பு)
சட்ட விரோத மின்பாவனையை தடைசெய்ய மின்சார சட்ட மூலங்களை தயாரித்து வருவதாக மின்சார சபைத்தலைவர் நேற்று செய்தியாளர் மாநாட்டில் அறிவித்துள்ளார்.

இச்சட்ட மூலங்கள் விரைவில் மந்திரிசபையின் அங்கீகாரத்துக்கு சமர்பிக்கப்படுமென மின்சக்தி எரிபொருள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# அகதிகள் பலர் தமது இருப்பிடம் திரும்பம்!

(மானிப்பாய்)
மானிப்பாய், ஆனைக்கோட்டை நவாலி பகுதிகளில் அகதிகளாக தங்கியிருந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்வதைக் காணமுடிகிறது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக குடாநாட்டில் இடம்பெற்ற வானத்தாக்குதல்களினால் இடம்பெயர்ந்து மேற்படி இடங்களில் தஞ்சம் புகுந்திருந்த யாழ்ப்பாணம் கொட்டடி, நாவாந்துறை, பாசையூர் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் அப்பகுதிகளில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான நிலையைத் தொடர்ந்து மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியவண்ணமுள்ளனர். (71)

# மானிப்பாயில் பனங்கட்டி, பனாட்டு உற்பத்தி

(பண்டத்தரிப்பு)
மானிப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தில் பனங்கட்டி, பனாட்டு ஆகியன தற்போது உற்பத்திசெய்யப்பட்டு வருகின்றன.

சீனியின்விலை தற்போது குறைந்துள்ளதால் பதநீரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பனங்கட்டியின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பனம் பொருளிலிருந்து சீனி தயாரிக்கும் தொழில் நிலையம் ஒன்றை இச்சங்கம் எதிர்வரும் தை மாதத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேற்படி சங்கத்தின் விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. சி. ரி. மகாதேவன் தெரிவித்தார்.

பனம்பொருளிலிருந்து ஜாம், ரொபி ஆகியவற்றையும் உற்பத்திசெய்ய திட்டமிடப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சித்த மருத்துவத்துறை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையின் இறுதி சித்த மருத்துவசத்திரசிகிச்சை பட்டதாரி மேலதிக பரீட்சை 1990-ம் ஆண்டு முடிவுகள் வெளியாகியுள்ளது.

மேற்படிபரீட்சையில் செல்வி எஸ். ஜெயந்தினி, ஆர் பாஸ்கரன் ஆகியோர் சித்திடைந்துள்ளனர்.

நான்காவது ஆண்டு சித்த மருத்துவ சத்திர சிகிச்சைப் பட்டதாரி மேலதிக பரீட்சையில் செல்வி ஆர். அருந்ததியும், மூன்றாவது ஆண்டு சித்த மருத்துவ சத்திரசிகிச்சை பட்டதாரி மேலதிக பரீட்சையில் ரி. சிவசுதன், செல்வி எஸ். கௌரிஸ்வரியும், இரண்டாவது ஆண்டு சித்த மருத்துவ சத்திரசிகிச்சை பட்டதாரி மேலதிக பரீட்சையில் செல்வி எஸ். கலைமகள், செல்வி எம். மனோரஞ்சிதமலர், எஸ். ராஜகுமார், செல்வி ரி. சாந்தினி, எஸ். வர்ணகுலேந்திரன் ஆகியோரும், முதலாம் ஆண்டு சித்த மருத்துவ சத்திர சிகிச்சை பட்டதாரி மேலதிக பரீட்சையில் செல்வி கே. மனோன்மணி, செல்வி எம். நளினி, செல்வி என். சுவந்தினி ஆகியோரும் சித்தியடைந்துள்ளார்கள்.

மேற்படி பரீட்சைமுடிவுகள் யாவும் பல்கலைக்கழக மூதவையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை ஆகும். (153)

## எரிபொருள் தட்டுப்பாட்டின் எதிரொலி
# புங்குடுதீவில் குடிநீர் பெறுவதில் பெரும் கஷ்டம்

(புங்குடுதீவு)
எரிபொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக புங்குடுதீவுப் பகுதியில் என்றுமில்லாதவாறு குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் தொட்டிகளில் தண்ணீரை தேக்கிவைத்து விற்பனையில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையான வியாபாரிகளில் ஒரு சிலரின் தவறான தண்ணீர் விநியோகத்தால் பொதுமக்கள் குடிநீரை பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் அவர்களிடமிருந்து பெருந்தொகையான பணத்தையும் அறவிட்டு வருவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

வேலணை சாட்டி பகுதியிலிருந்து உழவு இயந்திரங்கள், பவுசர்கள்மூலமாக குடிநீரைக் கொண்டுவந்து விற்பனைசெய்பவர்கள். தற்போது எரிபொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மேற்கொண்டு வருவதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. (101)

## காலாவதியான
# காசோலைகளை புதுப்பிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
பொதுப்பரீட்சைகளில் மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட காசோலைகள் காலாவதியானால் மேற்படி காசோலைகளை கொழும்புக்கு அனுப்பி புதிய திகதி பெற்றுக்கொள்ளுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி ஆசிரியர்கள் வடமாநில கல்விப்பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள பரீட்சை பகுதியில் காசோலைகளை கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (153)

# இந்திய மீனவர்மீது தாக்குதல்

(சென்னை)
கச்சதீவுக்கு அருகில் சென்ற இந்திய விசைப்படகுக்கு இலங்கை கடற்படையினர் 'பல்ப்' குண்டுகளை வீசியதால் படகு முற்றாக எரிந்து சாம்பலாகியது. இப்படகில் சென்றவர்கள் உயிர்தப்பினாலும் படகோட்டிநிலை என்னவென்பது பற்றி இதுவரை தகவல்தெரியவில்லை. இதுவிடயம் குறித்து தமிழ்நாடு மாநில முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவசரமாக மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கை கடற்படையினர் தொடர்ந்து மேற்கொண்டுவரும் அட்டூழியங்களை முடிவுக்கு கொண்டுவருமாறு கருணாநிதி பிரதமரை வற்புறுத்தி வருகின்றார். இச்சம்பவம் குறித்து இராமேஸ்வர மீனவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (ச)

## என். டி. ராமராவ் சுகவீனம்

(சென்னை)
ஆந்திரா மாநில முன்னாள் முதலமைச்சரும், இன்றைய இந்திய தேசிய அரசாங்கத்தின் தலைவர்களிலொருவருமான திரு, என். டி. ராமராவ் கடும் சுகவீனமுற்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திரு. ராமராவுக்குச் சளிச்சுரம், நீரிழிவு வியாதிகளுக்குச் சிகிச்சை அளித்துவருவதாக அறிவிக்கப்படுகிறது. (ச)

## இராணுவ காவலிலிருந்த
# கைதிகள் தப்பியோட்டம் 30 தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு காரைநகர் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் தப்பியோடியதையடுத்து அப்பகுதியிலுள்ள முப்பது தமிழர்கள் சிங்கள அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இம்முகாமிலிருந்து கைதிகள் பலர் தப்பியோடியதைத் தொடர்ந்து தேடுதல் நடத்திய அதிரடிப்படையினரே இவ்வாறு தமிழர்களை சுட்டுக் கொன்றார்கள்.

இச் சம்பவத்தில் தடுப்புக் காவலிலிருந்த முஸ்லிம்களே தப்பியோடியதாகதெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச

## அரசஊழியர், ஓய்வூதியம் பெறுவோருக்கு
# புங்குடுதீவில் 1-ம், 2-ம் கட்ட நிவாரணம் கிடைத்துள்ளது

(புங்குடுதீடு)
புங்குடுதீவு பகுதியிலுள்ள ஒரு சில கிராம சேவையாளர் பிரிவுகளில் அரச ஊழியருக்கும், ஓய்வூதியத்தை பெறுவர்கள் பலருக்கும் 1ம், 2ம் கட்ட நிவாரண பொருட்களை பல நோ. கூ. சங்க கடைகள் மூலமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிவாரணப் பொருட்களை பெறாத அரச ஊழியர்களும், ஓய்வூதிக்காரர்களும், கிராமசேவையாளரின் காரியாலயத்திற்கும், சங்கக் கடைகளுக்கும் சென்று நிவாரணப் பொருட்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்து வருகின்றார்கள். (101

## பாடசாலை மாணவர்களுக்கு
# காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)
பாடசாலை மாணவர்கள் அனைவரையும் காப்புறுதி செய்யும் திட்டம் நேற்று முதல் நாடுமுழுவதும் அமுல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா குருநாகலையில் நேற்று ஆரம்பித்துவைத்தார். இத்திட்டத்தில் மாணவர்கள் மாதாந்தம் 30 ரூபாவை காப்புறுதி கொடுப்பனவாக செலுத்தவேண்டும் மாணவர்கள் விபத்துக்குள்ளாகினாலும் உயிரிழந்தாலும் பெருந்தொகையாக பெறமுடியும் இத்திட்டதில் நாற்பத்திமூன்று லட்சம் மாணவர்கள் காப்புறுதி செய்யப்படுவர்.

# நெடுந்தீவு-குறிக்கட்டுவான் படகுசேவைமீண்டும் ஆரம்பம்

(புங்குடுதீவு)

கடந்த பல வாரங்களுக்கு மேலாக நடைபெறாமலிருந்த நெடுந்தீவு-குறிகட்டுவான் படகுச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கையால் புங்குடுதீவுப் பகுதிகளில் தேங்காய் உட்படப் மற்றும் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு ஓரளவுக்குக் குறைந்துள்ளது,

கடந்த சில மாதங்களுக்கு மேலாக இப்பகுதியில் ஒரு தேங்காயின் விலை 15 ரூபா முதல் 17 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது 10 ரூபா முதல் 12 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. [101]

## ஹெலியிலிருந்து பத்திரிகை போடப்பட்டது

(வடமராட்சி)

நேற்று வடமராட்சியில் வேட்டுக்களுடன் வானிலிருந்து ஹெலிகொப்டரிலிருந்த வண்ணம் 'தினகரன்' செய்தித் தாள்கள் வீசப்பட்டன.

மேற்படி பத்திரிகைகள் நாவலர் மடம், உடுப்பிட்டி, தொண்டமானாறு போன்ற பகுதிகளில் அதிகளவில் விழுந்தன. (51)

## குருநகரில் மிதிவெடியில் காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்த தமது வீட்டைப் பார்க்கச் சென்ற ஒருவர் மிதிவெடியில் வலது காலை இழந்தார்.

குருநகர் பகுதியில் நேற்று பிற்பகல் மேற்படி சம்பவம் நடைபெற்றது. (வி)

## இளவாலையில் ஹெலிதாக்கு!

(பண்டத்தரிப்பு)

சேந்தாங்குளம், இளவாலை ஆகிய பகுதிகளில் நேற்று நண்பகல் ஹெலி கொப்டர் ரோந்து சுற்றி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. [72]

## பருத்தித்துறையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துறை புலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையமும் பலத்த சேதமடைந்துள்ளன. (51)

## உடுப்பிட்டியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 67), உடுப்பிட்டி. எஸ். முத்துலிங்கம் (வயது 38) குரும்பசிட்டி. அன்ரன் ஞானச்செல்வம் (வயது 37), பலாலி. ஆ. நகுலேஸ்வரன் (வயது 15), மண்டான். எஸ் குஞ்சுப்பிள்ளை (வயது 65), உடுப்பிட்டி ஆகியோர் மிக ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிறீஸ்தவ தேவாலயம் பெரும் சேதமடைந்துள்ளதுடன், திருமதி ஆர். குலவீரசிங்கம் என்பவரின் மூன்று வர்த்தக நிலையங்களும் பெரும் சேதமடைந்தன. (51)

## அத்தியாவசிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிகள் குறித்து ஆராய்வதற்கும் மின்சார விநியோகத்தை சீராக்குவதில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் இதர அத்தியாவசிய சேவைகளை சீராக்க தற்போது நிலவும் வசதிகளை எந்தளவுக்கு சிறந்த முறையில் செயற்படுத்துவது என்பன குறித்தும் மேற்படி கூட்டத்தில் தீவிரமாக ஆராயப்படவிருக்கிறது. [153]

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## யாழ். கோட்டைக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். கோட்டைக்குள் நேற்று முதல் தடவையாக உள்ளூர் பத்திரிகையாளர்கள் சென்று பார்வையிட்டனர். அப்போது கோட்டையின் தற்போதைய நிலைமை தெரிய வந்தது.

காலை 11 மணிக்கு கோட்டைக்குள் பத்திரிகையாளர் சென்று பார்வையிட்டனர்.

கோட்டையின்உட்புறத்தில் ஆங்காங்கே புலிகளின் ஷெல் தாக்குதல்களினால் பெரும் கிடங்குகள் ஏற்பட்டுள்ளதுடன் தென்னை மரங்கள் உட்பட பல மரங்கள் முறிந்தும் சேதமடைந்தும் காணப்படுகிறது.

கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறும்போது அங்கிருந்த சகல பொருட்களையும் தீயிட்டுக் கொளுத்திவிட்டுச் சென்றுள்ளனர் என்பதற்கான அடையாளங்களும் காணப்பட்டது.

துப்பாக்கிகள், வாகனங்கள், இரும்புப்பெட்டிகள், தட்டச்சு இயந்திரம் உட்பட பல பெறுமதியான பொருட்கள் தீயிடப்பட்ட நிலையில் கோட்டையில் காணப்படுகின்றன. இராணுவத்தினர் பாவித்த சமையலறை மற்றும் சில பகுதிகளும் எரிந்த நிலையில் காணப்பட்டது.

ராணிமாளிகை, தேவாலயம் பொலிஸ் அதிபர் விடுதி, சிறைச்சாலை அதிபர் விடுதி உட்பட சகல கட்டடங்களும் முற்றுகச் சேதமடைந்துள்ளன.

தேவாலயத்தில் உள்ளேயிருந்த வாய்க்கால் போன்ற கிடங்கிலும், அருகிலும் இறந்த இராணுவத்தினரின் சடலங்கள் அரைகுறையாக புதைக்கப்பட்ட நிலையிலிருக்கிறது. சிதைந்த எலும்புக் கூடுகள் இக் கிடங்குகளில் காணப்படுகிறது.

அசுழிப்பகுதியில் அவ்ரோ விமானத்திலிருந்து போடப்பட்ட பல பொதிகள் காணப்படுகின்றன.

இதேபோல கடல்பகுதியில் விமானத்திலிருந்து போடப்பட்ட எரிபொருள் பீப்பாக்கள் பல காணப்படுகின்றன.

கோட்டை வாசலில் பெரிய புலிக்கொடியொன்று பறக்க விடப்பட்டுள்ளது. தேவாலயத்தின் உச்சியில் இரு புலிக்கொடிகளும் பண்ணை பக்கமாக கோட்டைக்குள் உள்ள பாரிய மரத்தில் மற்றொரு புலிக்கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளது. நான்கு பக்கத்திலிருந்து பார்த்தாலும் கோட்டைக்குள் புலிக்கொடி பறப்பது தெளிவாக தெரிகிறது.

## ஒரு குடம் தண்ணீர் ஐந்தரை ரூபா

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் ஒரு குடம் தண்ணீர் ஐந்து ரூபா ஐம்பது சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாலேஇவ்வாறு விலை அதிகரித்துள்ளது.

தொடர்ந்து குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் இவ்விலை மேலும் அதிகரிக்கலாம். என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பாடசாலை பாதுகாப்புக்கு விசேட கொடி ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

விமான, ஹெலி தாக்குதல்களிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு சகல பாடசாலைகளிலும் விசேட கொடி பறக்கவிடப்பட வேண்டும் என்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா, சுந்தரலிங்கம் யாழ். மாவட்ட சகல பாடசாலை அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

பாடசாலை கட்டிடங்களில் சம அளவு துணிகளினால் வெள்ளையும், கடும் நீலமும் சேர்த்துத் தைத்த கொடிகளை வானத்திலிருந்து பார்க்கும் பொழுது தெளிவாக தெரியும் வண்ணம் பறக்கவிட வேண்டும். பாதுகாப்பை முன்னிட்டு இக்கொடியின் நிற அமைப்பு செஞ்சிலுவைச்சங்க மூலம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்படுகின்றது.

மாணவர்களின் துவிச்சக்கரவண்டிகள் மேல் இருந்து பார்க்கையில் தெரியாது இருக்கும்படி பாதுகாப்பான இடங்களில் நிறுத்திவைக்க வேண்டும்.

பாடசாலை விடும்பொழுது, மாணவர்களை வகுப்பு ரீதியாக ஐந்து நிமிட இடைவெளியில் மாணவர் தலைவர்கள், சாரணியர்கள், ஆசிரியர்கள் உதவி உடன் பாதுகாப்பாக வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும்.

பெற்றோர் பாதுகாவலர்களை கூடிய அளவுக்கு பாடசாலையில் தங்க வைத்து அவசியம் ஏற்படும் வேளை மாணவர் பாதுகாப்பில் அவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

பாடசாலை நேரத்தில் மாணவர்களை எக்காரணம் கொண்டும் பாடசாலை வளவுக்கு வெளியே அனுமதிக்காமல் இருக்க வேண்டும்.

பாடசாலைகளில் முதலுதவிப் பெட்டிகளில் அவசர சிகிச்சைக்கு ஏற்ற மருந்து வகைகளைப் பேணி வைத்திருக்க வேண்டும். (153)

## யாழ். நகரிலும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் விழுந்து வெடித்ததில் இலவச உணவு நிவாரணம் பெற்று வந்த பெண் ஒருவர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதுடன், பலர் காயமுமடைந்தனர். இப்பகுதிகளிலுள்ள வீடுகளும் சேதமடைந்தன. (வி)

# ரயில்வே தமிழ் உயர் அதிகாரிகளுக்கு உடன் வேலைநீக்க உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாண ரயில் நிலையங்களில் கடமையாற்றிய 20 துக்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தால் உடன் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மட்டுநகர், திருமலைப்பகுதிகளில் கடமையாற்றிய உயர் அதிகாரிகளுக்கே மேற்படி அறிவித்தல் கிடைத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்து வந்து பின்பு போக்குவரத்து வசதிகளின்றி கடமைக்கு போகமுடியாமல் இருந்ததினாலேயே இவர்களுக்கு இந்த அறிவித்தல்கள் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (வி)

## டென்மார்க்கில்

# புலிகளுக்கு எதிராக நடவடிக்கையை ஆட்சேபித்து தமிழர் ஊர்வலம்

(டென்மார்க்)

டென்மார்க் தமிழீழ விடுதலைப் புலிகள் பணிமனையைச் செயற்படாமல் தடுக்க டென்மார்க் பொலிஸார் எடுத்து வரும் நடவடிக்கையை எதிர்த்து, டென்மார்க் தமிழ் மக்கள் விரிவான நடவடிக்கை எடுத்துவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிலர் கொடுத்த தவறான தகவல்களை அடிப்படையாக வைத்துடென்மார்க் பொலிஸார்எடுத்துவரும் கடவடிக்கையைக் கண்டித்து தமிழர் ஊர்வலங்களை நடத்திவருகின்றனர். (ச)

## இராணுவம் சுட்டு ஒருவருக்கு காயம்

(மட்டுநகர்)

மட்டுநகரைச் சேர்ந்த டச்பார், நாவலடி மற்றும் செங்கலடிப்பகுதிகளில் சிங்கள இராணுவத்தினர் தேடுதல் வேட்டையின்போது ஒருவரை காலில் சுட்டு காயப்படுத்தி முகாமுக்குக் கொண்டுசென்றதாகத் தெரியவருகிறது. (வி)

## மணல் ஆறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினருக்கு உதவிக்காக வந்த மற்ற இராணுவத்தினர், விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி பெரும் சேதத்துடன் மீண்டும் முகாமுக்குள் சென்றனர்.

மேற்படி மோதலில் பெருந்தொகையான ஆயுதங்களை இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரி-56 துப்பாக்கி 2, ரி.86 துப்பாக்கிகள்-2, 14 ரவைக் கூடுகள், 990 ரவைகள், ஜே. ஆர். கைக்குண்டுகள், தலைக்கவசம் 8, சப்பாத்துக்கள் 4 சோடி, கெல்சர் 4, தண்ணீர் கொள்கலன் - 1. (வி)

## வீர மரணம்

(மாங்குளம்)

மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து சிங்கள இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் குண்டினால், விடுதலைப் புலிப் போராளிகள் சுதாகர், கேஞ்சன் ஆகிய இருவர் வீரமரணம் அடைந்தனர். (வி)

## மட்டுநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி மோதலின்போது ஊர்காவற்படையினருக்கு உதவியாக சிங்களஇராணுவம் வந்தபோது மோதல்கள் வலுவடைந்தது.

நீண்டநேரம் நடைபெற்ற இம்மோதல் பற்றிய சேதவிபரம் தெரிவிக்கப்படவில்லை. (வி)

## ஊர்காவற்றுறையிலிருந்து

# இடம்பெயர்ந்து வந்த மக்கள் புங்குடுதீவில் தஞ்சம்

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறையில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தின் நடவடிக்கைகள் காரணமாக அப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துவந்துள்ள பெருந்தொகையான மக்கள் புங்குடுதீவு பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இவர்களிக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளில் புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சன சமூகத் தலைவர் திரு. வி. லீனஸ் புங்குடுதீவு பகுதியிலுள்ள கிராம சேவையாளரிடம் தொடர்புகொண்டதின் மூலமாக வேலணை உதவி அரசாங்க அதிபர் நேரில் இடம்பெயர்ந்துள்ள மக்களைப் பார்வையிட்டார்.

இவர்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்கும் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டதன் பயனாக புங்குடுதீவு-நயினாதீவு பல நோ. கூ. சங்கக் கிளைகள் மூலமாக நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சேவையைப் பாராட்டி வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தனபாலசிங்கத்திற்கு அம்மக்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தார்கள். (101)

## சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம், பொதுமக்களைப் படுகொலை புரிவதும், சந்தேகநபர்களைக் கொடூரமாகச் சித்திரவதை செய்வதும், திடீர் திடீரெனக் கைதுசெய்யப்படுவோர் மர்மமாக மறைவதும், இலங்கையில் குறிப்பாக, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டது என்று சர்வதேச மன்னிப்புச் சபை இம்மாதச் செய்தி அறிக்கையிலும் புள்ளி விபரங்களுடன் வெளியிட்டுள்ளது.